

சென்னை,மயிலாப்பூர், சாந்தோம் நெடுஞ்சாலை, ரோசரி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளியில் இன்று (29.08.2024) சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு ”சட்டமன்ற நாயகர் – கலைஞர் குழுவின் சார்பில் பள்ளி மாணவர்களுக்கான மாநில அளவிலான கருத்தரங்கை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, முன்னாள் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர் எஸ். பீட்டர் அல்போன்ஸ், பேரவை முதன்மைச் செயலாளர் முனைவர் கி.சீனிவாசன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாகர்கோவில் செயிண்ட் ஜோசப் மெட்ரிக்குலேஷன் பள்ளியில், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ”Coffee With கல்வி அமைச்சர்” எனும் கலந்துரையாடல் நிகழ்வில் கலந்து கொண்டு மாணவிகளுடன் கலந்துரையாடினார். அமைச்சர் மனோ தங்கராஜ் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மேயர், மாவட்டக் கழகச் செயலாளர் மகேஷ், மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, தொடக்கக் கல்வி இயக்குனர் நரேஷ், கழக மாணவரணித் தலைவர், தமிழ்நாடு மாநில பெற்றோர் – ஆசிரியர் கழக உறுப்பினர் ராஜீவ் காந்தி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பால தண்டாயுதபாணி, பள்ளி தாளாளர் மரிய செல்வம், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சிகரம் சதிஷ் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

### அத்திபள்ளி வழியாக

# ஓசூர் முதல் பொம்மசந்திரா வரை மெட்ரோ இரயில் சேவை!

## மேலாண்மை இயக்குனர் எம்.ஏ.சித்திக் ஐ.ஏ.எஸ்.ஆலோசனை!

ஓசூர், ஆக. 30-

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் படி மற்றும் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்தபடி, அத்திபள்ளி வழியாக ஓசூர் முதல் பொம்மசந்திரா வரை விரைவான போக்குவரத்து அமைப்பை (MRTS) அறிமுகப்படுத்துவதற்கான சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இந்த விரிவான சாத்தியக்கூறு அறிக்கையை இறுதி செய்வதற்கான ஒரு நடவடிக்கையாக, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ.சித்திக், 27.08.2024 அன்று பெங்களூர் மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் எம். மகேஷ்வர் ராவ்வை பெங்களூர் மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் சந்தித்து, ஓசூர் முதல் பொம்மசந்திரா வரை உள்ள மெட்ரோ பாதையின் முக்கிய அம்சங்களைப் பற்றி ஆலோசனை நடத்தினார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் தி.அர்ச்சுனன், தலைமை பொது மேலாளர் டி.லிவிங்ஸ்டோன் எலியாசர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), பெங்களூர் மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் ஆர்.கே.ரெட்டி, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், பெங்களூர் மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் ஆலோசகர்கள் (M/s Balaji Railroad Systems Private Limited JV மற்றும் Habog Consultants Private Limited) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் குழுவினர் மற்றும் ஆலோசகர்கள் ஓசூர் பகுதிகளை நேரடியாக பார்வையிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கே.எம்.சரயு மற்றும் ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் எச்.எஸ். ஸ்ரீகாந்த், ஓசூர் துணை ஆட்சியர் திருமதி. பிரியங்கா ஆகியோரை சந்தித்து விரிவான ஆலோசனை நடத்தினர்.

அத்திபள்ளி வழியாக பொம்மசந்திரா முதல் ஓசூர் வரை மொத்தம் தோராயமாக 23 கி.மீ நீளத்திற்கு, தமிழ்நாட்டில் 11 கி.மீ. மற்றும் கர்நாடகாவில் 12 கி.மீ. நீளம் கொண்ட இந்த பாதை 12 மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் ஒரு பணிமனையை உள்ளடக்கியதாக அமையும்.

இந்த கூட்டத்தில் விரைவான போக்குவரத்து அமைப்பை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டன. இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டால், ஓசூர் மற்றும் பெங்களூரு இடையேயான போக்குவரத்து இணைப்பு மேம்படுத்தப்படும்.

### வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# கதிர்ஆனந்த் எம்.பி.வாக்காளர்களுக்கு இன்று நன்றி தெரிவிக்கிறார்!



மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றுள்ள டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. இன்று காலை கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க உள்ளார்.

**ஆம்பூர் சட்டமன்ற தொகுதி**
**குடியாத்தம் கிழக்கு ஒன்றியம்**

| வ. எண | நேரம் | கலந்து கொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|---|
| 1 | காலை 8.30 மணி | சின்னசேரி |
| 2 | காலை 8.45 மணி | அகரம்சேரி |
| 3 | காலை 9.00 மணி | கூத்தம்பாக்கம் |
| 4 | காலை 9.15 மணி | கொல்லமங்கலம் |
| 5 | காலை 9.30 மணி | பள்ளிகுப்பம் |

**அணைக்கட்டு மத்திய ஒன்றியம்**

| | | |
|---|---|---|
| 6 | காலை 9.45 மணி | அஹ்ராஹரம் |
| 7 | காலை 10.00 மணி | தோளப்பள்ளி |
| 8 | காலை 10.15 மணி | அகரம் |

**அணைகட்டு மேற்கு ஒன்றியம்**

| | | |
|---|---|---|
| 9 | காலை 10.30 மணி | குருவராஜபாளையம் |
| 10 | காலை 11.00 மணி | வேப்பங்குப்பம் |
| 11 | காலை 11.15 மணி | குப்பம்பட்டு |

| வ. எண | நேரம் | கலந்து கொள்ளும் ஊராட்சிகள் |
|---|---|---|
| 12 | காலை 11.30 மணி | இராமநாயினிகுப்பம் |
| 13 | காலை 11.45 மணி | அரிமலை |
| 14 | காலை 12.00 மணி | குப்பம்பாளையம் |
| 15 | பகல் 12.15 மணி | சின்னபள்ளிகுப்பம் |
| 16 | பகல் 12.30 மணி | பாக்கம்பாளையம் |
| 17 | பகல் 12.45 மணி | மேல்பள்ளிப்பட்டு |
| 18 | பகல் 1..00 மணி | ஆசனாம்பட்டு |

# திருப்பூர் தெற்கு மாவட்டம் - ஒன்றிய- நகர- பேரூர்க் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிவிப்பு!



திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் பொதுஉறுப்பினர்கள் கூட்டம் எனது (இல.பத்மநாபன்) தலைமையிலும், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் முன்னிலையிலும் கீழ்கண்ட பட்டியல்படி நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர்களாக கழக உயர்நிலைசெயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், கழகமகளிர் அணி துணைச் செயலாளர், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழிசெல்வராஜ் கலந்துகொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

அதுசமயம், அந்தந்த பகுதிக்குட்பட்டமாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், இன்னாள் - முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், இந்நாள் - முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழகத்தோழர்கள் தவறாது கூட்டத்தில் கலந்துகொண்டு, கூட்டத்தை சிறப்பிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| சட்டமன்றதொகுதி | நாள் / நேரம் | ஒன்றிய/நகர/பேரூர் கழகத்தின் பெயர் | இடம் |
|---|---|---|---|
| 101 தாராபுரம் (தனி) சட்டமன்றதொகுதி | 31.08.2024 (சனி) காலை 9.30 | மூலனூர்கிழக்குஒன்றியம் மூலனூர்மேற்குஒன்றியம் மூலனூ ர்பேரூர் கன்னிவாடிபேரூர் | ஸ்ரீசுபலட்சுமி திருமணமண்டபம், மூலனூர். |
| | 31.08.2024 (சனி) மதியம் 12.00 | தாராபுரம்ஒன்றியம் கொளத்துப்பாளையம்பேரூர் சின்னக்காம்பாளையம்பேரூர் | ஸ்ரீகோகுல் திருமணமண்டபம், தாராபுரம். |
| | 31.08.2024 (சனி) மாலை 4.00 | தாராபுரம்நகரம் | NG மஹால், மீனாட்சிபுரம், தாராபுரம். |
| | 31.08.2024 (சனி) மாலை 6.30 | குண்டடம்கிழக்குஒன்றியம் குண்டடம்மேற்குஒன்றியம் ருத்ராவதிபேரூர் | சமுதாயநலக்கூடம், ஈஸ்வர செட்டிபாளையம். |
| **சட்டமன்றதொகுதி** | **நாள் / நேரம்** | **ஒன்றிய/நகர/பேரூர்கழகத்தின்பெயர்** | **இடம்** |
| 102 காங்கேயம் சட்டமன்றதொகுதி | 01.09.2024 (ஞாயிறு) காலை 10.00 | வெள்ளக்கோவில்ஒன்றியம் வெள்ளக்கோவில் நகரம் முத்தூர்பேரூர் | ஸ்ரீபாலாஜிமஹால், வெள்ளக்கோவில். |
| | 01.09.2024 (ஞாயிறு) மாலை 4.00 | காங்கயம்தெற்குஒன்றியம் காங்கயம்வடக்குஒன்றியம் காங்கயம்நகரம் | தாமரைநாச்சியார் திருமணமண்டபம், ஆலாம்பாடி. |
| | 01.09.2024 (ஞாயிறு) மாலை 6.30 | சென்னிமலைகிழக்குஒன்றியம் சென்னிமலைமேற்குஒன்றியம் சென்னிமலைபேரூர் | அம்மன்காட்டேஜ், பசுவபட்டிபிரிவு, சென்னிமலை. |
| **சட்டமன்றதொகுதி** | **நாள் / நேரம்** | **ஒன்றிய/நகர/பேரூர் கழகத்தின்பெயர்** | **இடம்** |
| 125 உடுமலைப் பேட்டை சட்டமன்றதொகுதி | 02.09.2024 (திங்கள்) காலை10.00 | பொள்ளாச்சிதெற்கு (வடக்கு) ஒன்றியம் பொள்ளாச்சிதெற்கு (மத்தியம்) ஒன்றியம் பொள்ளாச்சிதெற்கு (தெற்கு) ஒன்றியம் சூளேஸ்வரம்பட்டிபேரூர் சமத்தூர்பேரூர் ஜமீன்ஊத்துக்குளிபேரூர் | ஸ்ரீசண்முகம் மஹால், உடுமலைசாலை, திப்பம்பட்டி. |
| | 02.0.92024 (திங்கள்) மதியம் 12.00 | குடிமங்கலம்மேற்குஒன்றியம் குடிமங்கலம்கிழக்குஒன்றியம் குடிமங்கலம்வடக்குஒன்றியம் | G.K.மஹால், பெதப்பம்பட்டி. |
| | 02.09.2024 (திங்கள்) மாலை 5.00 | உடுமலைப்பேட்டைநகரம் | நகர கழக அலுவலகம், உடுமலைப்பேட்டை. |

**இல.பத்மநாபன்**
செயலாளர், திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க.

### முதுகுளத்தூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# எஸ்.காதர்பாட்சா வெள்ளைச்சாமி 12ஆம் ஆண்டு நினைவேந்தல்!

## மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிக்கை!



இராமநாதபுரம், ஆக. 30 -

முகவை மாவட்டத்தில் கழக வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய முன்னாள் முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினரும். முன்னாள் தலைமை பொதுக்குழு. செயற்குழு மற்றும் சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினரும், எனது தந்தையாருமான தெய்வத்திரு. எஸ். காதர்பாட்சா (எ) வெள்ளைச்சாமி ,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்., அவர்களின் நினைவேந்தல் நிகழ்ச்சி ஆண்டு தோறும் ஆகஸ்ட் மாதம் 31ந் தேதி நடைபெறுவதும், மாவட்ட கழகம் சார்பில் நினைவேந்தல் அனுசரிக்கப்படுவதும் வழக்கம்.

அதைப்போலவே நாளை (31.08.2024 - சனிக்கிழமை) காலை 9.30 மணியளவில் கமுதி வட்டம். காவடிப்பட்டி கிராமத்தில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் 12ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

எனவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கழக நிர்வாகிகள். ஊரக, நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக தோழர்கள். உற்றார். உறவினர்கள். நண்பர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கை விடுத்துள்ளார்.



வேலூர் மாவட்ட – மாநகர தி.மு.க. சைதாப்பேட்டை பகுதி சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி அவைத் தலைவர் பி.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. பகுதி செயலாளர் எஸ். தயாள்ராஜ் வரவேற்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன், எம்.எல்.ஏ. மாவட்ட அவைத் தலைவர் தி.அ. முகமது சகி, சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் வேலூர் மாநகர மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாநகர நிர்வாகிகள், மாநகர அவைத்தலைவர் சூரி (எ) அ.கோவிந்தன், மாநகர துணைச் செயலாளர்கள் ஏ.ஆர்.முன்னாஷெரிப், ஒய்.தேவனேசன், சத்துவாச்சாரி மண்டலக் குழுத் தலைவர் வீனஸ் ஆர்.நரேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் சி.சந்திரசேகரன், எஸ்.கதிரேசன், எம்.நூருல்லா ஆகியோர் கலந்து கொண்டனர்.